**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**Answer Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**D – 2607**

**PAPER – II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

## TAMIL
## PAPER – II

**NOTE :** This paper contains fifty (50) Multiple choice questions, each question carrying two (2) marks. Attempt all the qestions.

**குறிப்பு :** இந்த வினாத்தாளில் ஐம்பது (50) விடைதெரிவினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவும் இரண்டு (2) மதிபெண் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' - எனப் பாடியவர்.

(A) இறையனார் (B) தொல்காப்பியர்
(C) பனம்பாரனார் (D) நச்சினார்க்கினியர்

**2.** சங்க இலக்கியத்தில் இசை நயம் அமைந்த நூல்.

(A) புறநானூறு (B) பரிபாடல்
(C) அகநானூறு (D) பதிற்றுப்பத்து

**3.** பத்துப்பாட்டில் நக்கீரர் பாடிய நூல்கள்

(A) முல்லைப்பாட்டு, பொருநராற்றுப்படை
(B) குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை
(C) திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை
(D) பட்டினப்பாலை, திருமுருகாற்றுப்படை

**4.** திருக்குறள் பொருட்பாலில் அமைந்துள்ள அதிகாரங்கள்.

(A) 68 (B) 80 (C) 50 (D) 70

**5.** 'விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' - எனக்கூறியவர்.

(A) மாதவி (B) மாதரி
(C) மணிமேகலை (D) கண்ணகி

**6.** விருத்தம் எனும் பாவகையில் முதலில் தோன்றிய நூல்.

(A) சீவகசிந்தாமணி (B) பெரிய புராணம்
(C) சிலப்பதிகாரம் (D) கந்த புராணம்

7. திருவாசகம் எனும் நூல்
(A) முதல் திருமுறை (B) நான்காம் திருமுறை
(C) ஆறாம் திருமுறை (D) எட்டாம் திருமுறை

8. உறு, தவ என்பன
(A) பெயர்ச் சொற்கள் (B) வினைச் சொற்கள்
(C) இடைச் சொற்கள் (D) உரிச் சொற்கள்

9. தொல்காப்பியத்தில் வழு, வழுவமைதி கூறும் இயல்.
(A) செய்யுளியல் (B) வேற்றுமை இயல்
(C) கிளவியாக்கம் (D) விளிமரபு

10. பல் இதழ் இயையப் பிறக்கும் எழுத்து
(A) ப் (B) வ் (C) க் (D) ண்

11. 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' எனும் நூலைப்பாடியவர்.
(A) அருணகிரி நாதர் (B) தாயுமானவர்
(C) வள்ளலார் (D) குமரகுருபரர்

12. 'ஏழாம் உலகம்' நாவலின் ஆசிரியர்.
(A) இராஜ் மோகன் (B) ஜெய மோகன்
(C) ராஜ் கௌதமன் (D) ராஜ் நாராயணன்.

13. 'நந்தன்' எனும் நாடக நூலாசிரியர்.
(A) சி. சு. செல்லப்பா (B) இந்திரா பார்த்தசாரதி
(C) ந. முத்துசாமி (D) இந்திரா சௌந்திரராஜன்

14. மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய இதழ்.
(A) தமிழ்ப் பொழில் (B) சரஸ்வதி
(C) செந்தமிழ் (D) செந்தமிழ்ச் செல்வி

15. திருமந்திரத்தைப் பாடியவர்.
(A) இடைக்காட்டுச் சித்தர் (B) குதம்பைச் சித்தர்
(C) திருமூலர் (D) அகத்தியர்

16. நச்சினார்க்கினியர் உரை எழுதிய நூல்கள்

1. தொல்காப்பியம்
2. சிலப்பதிகாரம்
3. திருக்குறள்
4. சிந்தாமணி

**இவற்றுள்**

(A) 1 - ம் 2 - ம் சரி

(B) 1 - ம் 4 - ம் சரி

(C) 2 - ம் 4 - ம் சரி

(D) 3 - ம் 1 - ம் சரி

17. ஐஞ்சிறு காப்பியங்களுள் அடங்குவன.

1. சூளாமணி
2. பெரியபுராணம்
3. கம்ப ராமாயணம்
4. நீலகேசி

**இவற்றுள்**

(A) 1 - ம் 3 - ம் சரி

(B) 2 - ம் 3 - ம் சரி

(C) 1 - ம் 4 - ம் சரி

(D) 2 - ம் 4 - ம் சரி

18. நம்மாழ்வார் அருளிய நூல்கள்

1. திருவாய்மொழி
2. பெரிய திருமொழி
3. நாச்சியார் திருமொழி
4. பெரிய திருவந்தாதி

**இவற்றுள்**

(A) 1 - ம் 4 - ம் சரி

(B) 1 - ம் 3 - ம் சரி

(C) 2 - ம் 3 - ம் சரி

(D) 3 - ம் 4 - ம் சரி

19. பாரதியார் ஆசிரியராகப் பணிபுரிந்த இதழ்கள்

1. இந்தியா
2. கிராம ஊழியன்
3. மணிக்கொடி
4. சுதேசமித்திரன்

**இவற்றுள்**

(A) 1 - ம் 3 - ம் சரி

(B) 1 - ம் 4 - ம் சரி

(C) 2 - ம் 4 - ம் சரி

(D) 3 - ம் 4 - ம் சரி

20. **உறுதிக்கூற்று :** 'வினை எஞ்சு கிளவி என்பது ஊழ்வினை பற்றியது.'

**காரணம் :** சமயப் பின்னணியில் வினை பற்றிக் கூறுவது.

(A) **(உ)** சரியன்று **(கா)** சரியன்று

(B) **(உ)** சரி **(கா)** சரி

(C) **(உ)** சரியன்று **(கா)** சரி

(D) **(கா)** சரியன்று **(உ)** சரி

21. **உறுதிக்கூற்று :** பக்தி இலக்கியங்கள் திருமுறை இலக்கியங்கள் என்று போற்றப்பட்டன.

**காரணம் :** இறைவனைப் போற்றுவதால்

(A) **(உ)** சரியன்று **(கா)** சரி

(B) **(உ)** சரி **(கா)** சரி

(C) **(உ)** சரி **(கா)** சரியன்று

(D) **(உ)** சரியன்று **(கா)** சரியன்று

22. **உறுதிக்கூற்று :** நூற்றாண்டின் புதிய விழிப்பு முன்னோடி வடலூர் இராமலிங்கர் என்று பாரதி போற்றுவார்.

**காரணம் :** சமய, சமூக விடுதலையைப் பாடியதால்.

(A) **(உ)** சரி **(கா)** சரி

(B) **(உ)** சரி **(கா)** சரியன்று

(C) **(உ)** சரியன்று **(கா)** சரி

(D) இரண்டும் சரியன்று

23. **உறுதிக்கூற்று :** 'கலிங்கத்துப்பரணி ஒரு போர் இலக்கியம்'

**காரணம் :** தமிழர் போர் மரபுகளைக் கூறுவதால்

(A) **(உ)** சரி **(கா)** சரி

(B) **(உ)** சரி **(கா)** சரியன்று

(C) **(உ)** சரியன்று **(கா)** சரி

(D) **(உ) (கா)** இரண்டும் சரியல்ல

24. **உறுதிக்கூற்று :** உள்ளுறை என்பது அகப்பொருள் இலக்கணம்.

**காரணம் :** அது புறப்பொருளைச் சொல்வதில்லை

(A) **(உ)** சரியன்று **(கா)** சரி

(B) **(உ) (கா)** இரண்டும் சரியல்ல

(C) **(உ)** சரி **(கா)** சரியன்று

(D) **(உ)** சரி **(கா)** சரி

25. **உறுதிக்கூற்று :** 'தண்டபாணி சுவாமிகள் வண்ணச்சரபம் என்று போற்றப்படுகின்றார்.'

**காரணம் :** ஏழுவித நிறங்களைப் பாடியதால்

(A) **(உ)** சரி **(கா)** சரி

(B) **(உ), (கா)**, இரண்டும் சரியல்ல

(C) **(உ)** சரி **(கா)** சரியன்று

(D) **(கா)** சரி **(உ)** சரி அல்ல

26. **உறுதிக்கூற்று :** சுந்தரர் வன்தொண்டர் என்ப்போற்றப் படுகின்றார்.

**காரணம் :** புறச்சமயத் தொண்டர்களை எதிர்த்ததால்

(A) **(உ)**, **(கா)** இரண்டும் சரியல்ல

(B) **(உ)** சரி **(கா)** சரியன்று

(C) **(உ)** சரியன்று **(கா)** சரி

(D) **(கா)** சரி **(உ)** சரியன்று

27. **உறுதிக்கூற்று** : உரையாசிரியர் காலத்தைத் தமிழுக்கு மீட்சி இயக்கக் காலம் என்பர்.

**காரணம்** : புதிய இலக்கியங்களைப் படைத்ததால்

(A) **(உ)**, **(கா)** இரண்டும் சரி

(B) **(உ)** சரியன்று **(கா)** சரி

(C) **(உ)**, **(கா)** இரண்டும் சரியல்ல

(D) **(உ)** சரி **(கா)** சரியன்று

28. **உறுதிக்கூற்று** : முன்றில் என்பது இலக்கணப்போலி.

**காரணம்** : முற்றத்தைக் குறிப்பதால்

(A) **(உ)** சரி **(கா)** சரியன்று

(B) **(உ)** சரி. **(கா)** சரி

(C) **(உ), (கா)** இரண்டும் சரியல்ல

(D) **(கா)** சரி **(உ)** சரியன்று

29. **உறுதிக்கூற்று** : பாரதிதாசன் புரட்சிக்கவிஞர்

**காரணம்** : உணர்ச்சி மிக்க எழுச்சிக் கவிதைகளைப் பாடியதால்.

(A) **(உ)** சரி **(கா)** சரி

(B) **(உ)** சரியன்று **(கா)** சரி

(C) **(உ)** சரி **(கா)** சரியன்று

(D) **(உ), (கா)** இரண்டும் சரியல்ல

30. நிரல் படுத்துக.

சமயக்குரவர் நால்வர்

(A) சம்பந்தர்; சுந்தரர்; நாவுக்கரசர்; மாணிக்கவாசகர்

(B) சம்பந்தர்; நாவுக்கரசர்; சுந்தரர்; மாணிக்கவாசகர்

(C) நாவுக்கரசர்; சுந்தரர்; சம்பந்தர்; மாணிக்கவாசகர்

(D) மாணிக்கவாசகர்; சுந்தரர்; சம்பந்தர்; நாவுக்கரசர்

31. நகை தோன்றுவதற்கான நிலைக்களன்

(A) எள்ளல்; இளமை; பேதைமை; மடன்

(B) இளமை; பேதைமை; மடன்; எள்ளல்

(C) பேதைமை; மடன்; எள்ளல்; இளமை

(D) மடன்; இளமை; பேதைமை; எள்ளல்

32. எழுத்திலக்கணத்தின் பிரிவு அமைப்பு முறை

(A) பிறப்பு; எண்; பெயர்; முறை; உருவம்

(B) பெயர்; பிறப்பு; முறை; உருவம்; எண்

(C) எண்; பெயர்; முறை; பிறப்பு; உருவம்

(D) முறை; பிறப்பு; உருவம்; எண்; பெயர்

33. மும்மலங்களாவன

(A) மாயை; கன்மம்; ஆணவம்

(B) கன்மம்; மாயை; ஆணவம்

(C) மாயை; ஆணவம்; கன்மம்

(D) ஆணவம்; கன்மம்; மாயை

34. ஆற்றுப்படை இலக்கணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளோர்

(A) பாணர்; கூத்தர்; விறலியர்; பொருநர்

(B) விறலியர்; பொருநர்; பாணர்; கூத்தர்

(C) கூத்தர்; பாணர்; பொருநர்; விறலியர்

(D) பொருநர்; பாணர்; விறலியர்; கூத்தர்

35. வெண்பா இலக்கணத்தின் ஈற்றசை.

(A) நாள்; காசு; பிறப்பு; மலர்

(B) நாள்; மலர்; காசு; பிறப்பு

(C) பிறப்பு; காசு; நாள்; மலர்

(D) மலர்; காசு; பிறப்பு; நாள்

**36.** மொழியியலாய்வின் நான்கு பழநிலைகள்.

(A) ஒலியனியல்; உருபனியல்; தொடரனியல்; பொருளனியல்

(B) தொடரனியல்; உருபனியல்; ஒலியனியல்; பொருளனியல்

(C) உருபனியல்; ஒலியனியல்; தொடரனியல்; பொருளனியல்

(D) பொருளனியல்; ஒலியனியல்; உருபனியல்; தொடரனியல்

**37.** பெரும்பொழுது :

(A) முன்பனி; பின்பனி; கூதிர்; கார்

(B) கூதிர்; கார்; முன்பனி; பின்பனி

(C) பின்பனி; முன்பனி; கார்; கூதிர்

(D) கார்; கூதிர்; முன்பனி; பின்பனி

**38.** அறுவகை இலக்கண முறைமை:

(A) சொல்; எழுத்து; பொருள்; அணி; யாப்பு; புலமை

(B) எழுத்து; சொல்; பொருள்; யாப்பு; அணி; புலமை

(C) பொருள்; சொல்; எழுத்து; யாப்பு; அணி; புலமை

(D) அணி; சொல்; எழுத்து; யாப்பு; பொருள்; புலமை

**39.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | முல்லைப்பாட்டு | 1. | நக்கீரர் |
| (b) | பொருநராற்றுப்படை | 2. | பூதன்சேந்தனார் |
| (c) | நெடுநல் வாடை | 3. | முடத்தாமக்கண்ணியார் |
| (d) | இனியவை நாற்பது | 4. | நப்பூதனார் |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**40.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சுதமதி | 1. | கம்பராமாயணம் |
| (b) | அமுதவல்லி | 2. | மணிமேகலை |
| (c) | குகன் | 3. | சீவகசிந்தாமணி |
| (d) | கந்துக்கடன் | 4. | புரட்சிக்கவி |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

**41.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | என் சரித்திரம் | 1. | சுத்தானந்த பாரதியார் |
| (b) | ஆத்ம சோதனை | 2. | நாமக்கல் கவிஞர் |
| (c) | என் கதை | 3. | திரு. வி. க. |
| (d) | வாழ்க்கைக் குறிப்புகள் | 4. | உ. வே. சா. |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

**42.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வாழும் வள்ளுவம் | 1. | மா. இராமலிங்கம் |
| (b) | தமிழின்பம் | 2. | க.த. திருநாவுக்கரசு |
| (c) | நீதி இலக்கியம் | 3. | வா. செ. குழந்தை சாமி |
| (d) | புதிய உரை நடை | 4. | ரா. பி. சேதுப் பிள்ளை |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

43. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | சிந்துக்குத் தந்தை | 1. | திரு. வி. க. |
| (b) | தமிழ் மாணவன் | 2. | பாரதி |
| (c) | கிறித்தவக் கம்பன் | 3. | போப் |
| (d) | தமிழ்த் தென்றல் | 4. | கிருட்டினபிள்ளை |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

44. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வெண்பா | 1. | தூங்கலோசை |
| (b) | ஆசிரியப்பா | 2. | துள்ளலோசை |
| (c) | கலிப்பா | 3. | செப்பலோசை |
| (d) | வஞ்சிப்பா | 4. | அகவலோசை |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

45. பொருத்துக: [திணையும் புறமும்]

| | | | |
|---|---|---|---|
| (a) | வஞ்சி | 1. | பாலை |
| (b) | உழிஞை | 2. | நெய்தல் |
| (c) | வாகை | 3. | மருதம் |
| (d) | தும்பை | 4. | முல்லை |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.**

தமிழர்தம் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப்பிறப்பும் இரண்டும் ஒன்றேதான். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும் முதலாவதாகவும் அமைந்துள்ளது. சித்திரையை ஒரு சிறந்த மாதம் எனத் தமிழ் நாட்டவரும் வட நாட்டவரும் போற்றுகின்றனர். இம்மாதத்தில் மல்லிகையும் முல்லையும் மலர்ந்து மணம் வீசி மாநிலத்தை மகிழ்விக்கின்றன. தேமாவும் தீம்பலாவும் அரும் பழங்களைப் பாருக்கு நல்கி மக்கள் நாவினுக்கு நல்ல சுவையினைக்கொடுப்பதும் இக்காலத்திலேதான். மாரவேள் விழாக்காலம் என இந்தச் சித்திரையும் இதற்கு முன்வரும் பங்குனியும் இலக்கியங்களில் போற்றப் பெறுகின்றன.

வானவீதியில் பட்டொளி வீசிச்செல்லும் திங்களஞ் செல்வன் தன் முழு அழகையும் காட்டும் ஒரு திங்கள் சித்திரையே ஆகும்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்'

கலந்த ஒரு இனிய மாதமாகச் சித்திரையைக் காண்கின்ற புலவர் பல்லோர். காவிரியில் இத்திங்களில் பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தைச் 'சித்திரைச் சிலம்பன்' எனப் போற்றி மகிழ்ந்தார்கள் தமிழ் மக்கள். இத்தகைய எழில் பூத்துக் குலுங்கும் இந்த மாதத்தில் தமிழ் மக்கள் சிறந்த விழாக்கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

நிறைமதி நாளெல்லாம் தமிழர்க்குத் தலையாய நாட்களே. தமிழர் மட்டுமென்ன! உலகில் எவ்விடத்து வாழ்வோரும் இந்நிறைமதி நாளினை இன்ப நாளாகத்தான் கொள்வார்கள். இந்நிறைமதி நாள் திங்கள் தோறும் வருகின்றது. ஒவ்வொரு நிறைமதி நாளும் ஒவ்வொருவகையில் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. கார்த்திகையில் விளக்கீடாகவும், மார்கழியில் ஆதிரையாகவும், தையில் பூசமாகவும், மாசியில் மகமாகவும், பங்குனியில் உத்தரமாகவும் காட்சி தரும் விழா, சித்திரைத்திங்களில் சித்திரை மீன் சேர்ந்த நாளாகக் காட்சி நல்குகின்றது. இந்த மாதங்களின் பெயர்களாலேயே அந்த விழாச் சிறப்புக்கள் விளக்கமுறுகின்றன. இருபத்தேழு நட்சத்திரங்களிலே,

ஒவ்வொரு திங்களில் சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தில் நிறைமதியாகக் காட்சி தருகின்றான். அந்த நட்சத்திரங்களின் பெயரை ஒட்டியேதான் மாதங்களின் பெயர்களும் அமைவதைக் காண்கிறோம். சந்திரன் தன் நிறைநாளைச் சித்திரை நட்சத்திரத்தோடு சார்த்தி நிற்கும் அந்த மாதமே சித்திரை மாதமாகும். சித்திரை மாத்தில் சித்திரை நட்சத்திரத்தோடு சந்திரன் கூடும் நாளே 'சித்திரா பௌர்ணமி' எனும் நலமிகு நாளாகும். அந்நாளில் பொங்கி வழியும் பால்நிலாவைப் போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கித் திளைக்கும் என்பது உறுதி. அந்நாளில் பொங்கலிட்டுத் தெய்வங்களை மக்கள் வழிபட்டு விழாவாற்றி வந்தார்கள்.

மிகவும் பழங்காலந்தொட்டு, இந்த நிறைமதிப்பெருவிழா தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இவ்விழாவை மக்கள் வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டாட மாட்டார்கள். கார்த்திகையில் வீட்டுக்குள்ளேயே இருந்து விளக்கேற்றி வழிபட்டவர்கள், மார்கழியிலும் தையிலும், தண்ணிய தடம்படிந்து பொய்கையில் நீராடி மகிழ்ந்தவர்கள், மாசியிலும் பங்குனியிலும் வசந்தத்தையும் இளவேனிலையும் எதிர் நோக்கியிருந்தவர்கள், அப்பங்குனியில் மலரும் வசந்தம், வளமாரப் பூத்துக்குலுங்கும் சித்திரையில் மகிழாதிருப்பார்களோ? அவர்தம் மகிழ்ச்சி வீட்டோடு நில்லாது பரந்த நிலப்பரப்பினை நாடிச் செல்கின்றது. பரந்த மணல் வெளியும், சோலையும், கடற்கரையும், பிற ஆற்றுப்படுகைகளும் அவர்தம் விழாவுக்கு ஏற்ற இடங்களாய் அமைகின்றன. காதலரும் பிறரும் களித்து மகிழும் இத்தச் சித்திரை நிறை நாள் விழாவைப் பழங்கால இலக்கியங்கள் பாராட்டிப் பேசுகின்றன. சங்ககாலத்தை ஒட்டி எழுந்த இருபெருங்காவியங்களாகிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இவ்விழாவைப் போற்றுகின்றன.

இரு பெருங்காவியங்களும் இவ்விழாவை இந்திர விழா என்ற பெயரால் போற்றுகின்றன. இரண்டிலும் இவ்விழாவைப் பற்றிய இரு காதைகள் உள்ளன.

இவற்றைப் பயில்வார்க்கு இவ்விழாவைப் பற்றிய நல்ல விளக்கங்கள் புலனாகும். கோவலன் வாழ்ந்த நகராகிய காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையில் அமைந்திருந்தமையின் அவர்தம் விழா அழகிய காவிரி கடலொடு கலக்கும் அப்பரந்த வெளியிடத்தே நடைபெற்றது என அறிகின்றோம்.

46. மாரவேள் விழாக்காலம்

(A) தை. மாசி

(B) சித்திரை, பங்குனி

(C) சித்திரை, வைகாசி

(D) சித்திரை, மாசி

47. **உறுதிக்கூற்று** : சித்திரை மாத நிறை நிலவு நாளைச் சித்திரா பௌர்ணமியாகக் கொண்டாடுகிறார்கள்.

**காரணம்** : பால் நிலாவைப் போல் மக்கள் உள்ளமும் மகிழ்ச்சியில் பொங்கும்.

(A) (உ) சரி (கா) சரி

(B) (உ) சரியன்று (கா) சரி

(C) (உ) சரி (கா) சரியன்று

(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

48. மார்கழியில் கொண்டாடப்பெறும் நிறை நிலவு நாள்:

(A) விளக்கீடு

(B) பூசம்

(C) ஆதிரை

(D) உத்தரம்

49. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழர் ஆண்டுப்பிறப்பு | 1. | சித்திரைச்சிலம்பன் |
| (b) | காவிரி வெள்ளம் | 2. | வசந்தம் இளவேனில் |
| (c) | மாசி, பங்குனி | 3. | இந்திர விழா |
| (d) | சிலம்பு, மணிமேகலை | 4. | சித்திரை |

சரியான விடையைத் தெரிவு செய்க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**50.** கோவலன் வாழ்ந்த நகர்,

(A) தஞ்சை

(B) வஞ்சி

(C) உறையூர்

(D) காவிரிப்பூம்பட்டினம்

- o O o -

**Space For Rough Work**